போ. நிவேதன

உ
சிவமயம்

# நவமலர்

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## இந்து இளைஞர் கழகம்
## வருடாந்த

# விஜயதசமி வெளியீடு



ஓம் சக்தி! ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம்.

ஸு⁶ந்த வதனி ஸு⁶குண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே.

–சாது ஸ்ரீ முருகதாஸ்

ஜய வருடம் புரட்டாதித் திங்கள் 17ஆம் நாள்
03.10.2014

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125வது
ஆரம்ப ஆண்டு சிறப்பு வெளியீடு


G 777

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து இளைஞர் கழகத்தினால் வருடம் தோறும் வெளியிடப்படும் நவமலரானது இம்முறையும் சிறப்பான முறையில் வெளிவருதையிட்டு அகமகிழ்கின்றேன். இந்நூலிற்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். கல்லூரியின் 125ஆவது ஆண்டு தினத்தில் இந்நூல் வெளியிடப்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சிக்குரியதாக அமைகின்றது. இந்நூலை சிறந்த முறையில் வெளியீடு செய்கின்ற இந்து இளைஞர் கழகத்தினரைப் பாராட்டுகின்றேன். இப்பணி தொடர எல்லாம் வல்ல சிவஞானவைரவப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

திரு. ஐ. தயானந்தராஜா
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## 2014 ஆம் ஆண்டிற்கான இந்து இளைஞர் கழக

## நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| புரவலர் | – | திரு.ஐ.தயானந்தராஜா (அதிபர்) |
| துணைப்புரவலர்கள் | – | திரு.பொ.ஞானதேசிகன் |
| | | திரு.ச.நிமலன் |
| பெருந்தலைவர் | – | திரு.ஆ.நவநீதகிருஷ்ணன் |
| பெருஞ்செயலர் | – | திரு.பா.சற்குணராசா |
| பெரும்பொருளர் | – | திரு.ந.பரமேஸ்வரன் |
| விழா ஒழுங்கமைப்பாளர் | – | திரு.சி.ஜெயபாலன் |

| | | |
|---|---|---|
| தலைவர் | – | ம.சரண்ஜன் |
| செயலர் | – | பா.நீருஜன் |
| பொருளர் | – | கு.கேமராஜ் |
| உபதலைவர் | – | கி.கார்த்திக் |
| உபசெயலர் | – | யோ.நிதர்சன் |
| விழா அமைப்பாளர் | – | ஸ்ரீ.பிரணவன் |
| பத்திராதிபர் | – | ஜெ.ஜெயலக்சன் |

## ஆலோசனைக்குழு

| | |
|---|---|
| திரு.வா.சிவராசா | திரு.வ.தவகுலசிங்கம் |
| திரு.தி.திரவியநாதன் | திரு.அ.சண்முகலிங்கம் |
| திரு.தி.சிவகுமார் | திரு.ல.நிஷாந்தன் |
| திருமதி.ச.ஜெகதீஸ்வரன் | திருமதி.க.வாமதேவன் |
| திருமதி.ம.செல்வரத்தினம் | செல்வி.ந.வினித்தா |
| செல்வி.அ.காயத்திரி | திரு.நா.சிவசங்கரசர்மா |
| திருமதி.க.ஞானதயாளன் | திருமதி.வ.விக்ரர் |
| திருமதி.ம.லோகேஸ்வரசர்மா | திரு.சி.ரகுபதி |

சிவமயம்

# திருமுறைப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பண் :- சாதாரி 3ம் திருமுறை
அருளியவர் :- திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

எந்தமது சிந்தை பிரியாத பெருமானென இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்நியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பை நகரே.

## திருவாசகம்

அருளியவர் :- மாணிக்கவாசகர்

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூறடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.

## திருவிசைப்பா

அருளியவர் :- திருமாளிகைத்தேவர்

பெருமையிற் சிறுமை பெண்ணோடு ஆணாய்என்
பிறப்ப இறப்பு அறுத்த பேரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகன் உமையவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட்டரற்றும்
அப்பனே அம்பலத்து அமுதே
ஒருமையிற் பலபுக்கு உருவி நின்றானைத்
தொண்டனேன் உரைக்குமாறு உரையே.

## திருப்பல்லாண்டு

அருளியவர் :- சேந்தனார்

சேவிக்க வந்நயன் இந்திரன்
செங்கண்மால் எங்கம் திரை திசையான
கூவிக்க கவர்ந்து நெருங்கிக்
குழாம்குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்கு அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

அருளியவர் :- சேக்கிழார்

காழியர் தவமே கவுணியர் தனமே! கலைஞானத்து
ஆழிய கடலே! அதனிடை அமுதே! அடியார்முன்
வாழிய வந்து இம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிரை மொழியாள் தன் திருவருள் பெற்றனை என்பார்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய சகலகலாவல்லி மாலை



வெண் தாமரைக்கு அன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசகம் மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்
தாக வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்அமு
தார்ந்துன் னரும கடலிற்
குளிக்கம் படிக்கென்று கூடுங்கொ
லொவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற் சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் கருணைக் கடலே
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் தவிசொத் திருந்தாய்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்துதம் நிறைந்தாய்
சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் தடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்ல வல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்
வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக

மேற்பட்ட மன்னருமென்

பண்கண் டளவிற் பணியச்செய்

வாய்படைப் போன்முதலாம்

விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்

டேனும் விளம்பிலுன்போல்

கண்கண்ட தெய்வ முளதோ

சகல கலா வல்லியே.

# சுத்த சக்தி ஓம் சிவம் !

*ராகம் : மாண்டு* *தாளம் : திஸ்ர ஏகம்*

சுத்தசக்தி தர்மசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம் சிவம் (சு)

வேதசாஸ்த்ர சகலகலா நடனசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சு)

நாககீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர - தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம் (சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாமமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சு)

துஷ்டசத்ரு நாச சக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்
துஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சு)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல் தாயகம்
குரபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம் (சு)

**- ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.**

# ஓம் சக்தி ஓம் !

**ராகம் : மோஹனம்** **தாளம் : ஆதி**

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சந்தி ஓம், ஓம் சந்தி ஓம்,
ஓம் சத்தி ஓம், ஓம் சத்தி ஓம்,
ஓம் சத்தி ஓம், ஓம் சத்தி ஓம்,

ஸௌந்தர வதனி ஸௌகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் யுந்தன் தரிசனமே! (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணியே
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே! (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான யோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்!

-சாது ஸ்ரீ முருகதாஸ்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இந்திய ஜனாதிபதி கௌரவ கலாநிதி A.P.J அப்துல் கலாம் அவர்கள் ஆற்றிய உரையில் இருந்து ஒரு பகுதி

சூழ்நிலை உருவாவதற்கு என்ன வேண்டும் ஒவ்வொருவரது உள்ளத்திலும் மனத்தூய்மை வேண்டும்

### மனத்தூய்மை

எண்ணத்திலே மனத்தூய்மை இருந்தால்
நடத்தையில் அழகு மிளிரும்.
நடத்தையில் அழது மிளிர்ந்தால்
குடும்பத்தில் சாந்தி நிலவும்
குடும்பத்தில் சாந்தி இருந்தால்
நாட்டில் சீர்முறை உயரும்
நாட்டில் சீர்முறை இருந்தால்
உலகத்தில் அமைதி நிலவும்.

எல்லாவற்றிக்கும் அடிப்படை மனத்தூய்மை என்பதை இச்சிறு கவிதை மூலம் உங்களுக்கு தெளிவாக்கி இருக்கும் என்று நம்புகிறேன்.

**மனத்தூய்மை** எங்கிருந்து வரும். மூன்றே மூன்றுபேர்களிடம் இருந்து தான் இதை கற்றுக்கொள்ள முடியும். அவர்கள் யார்? அவர்கள் தான் தாய். தந்தை மற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்

### உள்ள உறுதி

புதிய எண்ணங்கள் உருவாக்கும் உள்ள உறுதி இன்று என்னிடம் மலந்துள்ளன.
எனக்கென்று ஒரு புதிய பாதையை உருவாக்கி அதில் பயணம் செய்வேன்.
முடியாது என்று எல்லோரும் சொல்வதை என்னால் முடியும் என்ற மன உறுதி என்னிடம் உருவாகி விட்டது.
புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை செய்ய முடியும் என்ற உறுதி.

**என்னிடம் என்றென்றைக்கும் கொந்தளிக்கிறது.**

இந்த உள்ள உறுதிகள் எல்லாம் இளைய சமுதாயத்தின் சிறப்புகளாகும். அஸ்திவாரம் ஆகும்.

இந்த நாட்டின் இளைய சமுயாத்தின் உறுப்பினரான நான்

என் கடின உழைப்பாலும், உள்ள உறுதியினாலும் தோல்வியை தோல்வியடையச் செய்து
வெற்றி பெற்று என் நாட்டை வளமான நாடக்குவேன்.

நண்பர்களே, உள்ளத்தில் உறுதிவேண்டும் என்று சொன்னேன். எப்படிவரும், யார் மூலம் வரும். நல்ல மனிதர்கள், நல்ல ஆசிரியர்கள், நல்ல புத்தகங்கள் இவைகள் **உள்ளத்தில்** உறுதிபெற வைக்கும். நாம் எக்காரியத்தையும் செய்யலாம், செய்ய முடியும், செய்து வெற்றி பெற முடியும் என்ற உறுதியும், நம்பிக்கையும் அளிக்கின்றது. மனதில் உறுதி இருந்தால், வெற்றி அடைவீர்கள், **நீங்கள்** வெற்றி அடைவீர்கள்.

*"நான் என்றென்றைக்கும் கொடுத்துக்கொண்டே இருப்பேன்"*

என்ற மனநிலை நம் இளைஞர்களுக்கு வருமென்றால், அந்த மனநிலை *"எனக்கு வேண்டும். எனக்குத்தான் வேண்டும்"* என்ற எண்ணத்தை சுட்டெரிக்கும். இளைஞர்களே நீங்கள் எல்லோரும் இப் பணிக்கு தயாரா? வாருங்கள் நண்பர்களே! www.whatcanigive.info என்ற இணைய தளத்தில் உங்களை பதிவு செய்து இந்த இயக்கத்தை வலுப்படுத்துங்கள். நீங்கள் என்னுடன் தொடர்பு கொள்ள www. abdulkalam.com என்ற இணைய தளத்தின் மூலம் தொடர்பு கொள்ளலாம் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

உங்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்காக ஒரு உறுதி மொழியை உருவாக்கியிருக் கின்றேன். நீங்கள் எல்லோரும் என்னுடன் சேர்ந்து சொல்வீர்களா.

## Oath for the students

1. I will have a goal and work hard to achieve that goal. I realize that small aim is a crime.
2. I will be a good member of my family, a good member of the society, a good member the nation and a good member of the world.
3. I will work with integrity and succeed with integrity.
4. I will always try to save or better someone's life. Wherever I am, a thought will always come to my mind. That is "What can I give?"
5. I will always protect and enhance the dignity of every human life.
6. I will always rember that "Let not my winged days, be spent in vain".
7. I will always work for clean planet Eartth and clean energy.
8. As a youth of the world, I will work and work with courage to achieve success in all my tasks and enjoy the success of others.
9. My National Flag files in my heart and I will bring glory to my nation.

## நன்றிகள் உரித்தாகுக

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இந்து இளைஞர் கழகம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. இக் கல்லூரியின் அடிநாதமாக நின்றொலிக்கக் கூடிய சைவப் பாரம்பரியத்தை தொடர்ந்து செல்கின்ற கழகமாக இந்து இளைஞர் கழகம் மிளிர்கின்றது.

எமது கழக நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக நின்று வழிப்படுத்துகின்ற கல்லூரி அதிபர் அவர்களுக்கும் பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல. ஆலய பூஜைகளை ஆகம விதிப்படி அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி வரும் ஆலய பிரதம குருவுக்கும் எமது கழகத்தின் சார்பில் நன்றிகள் உரித்தாகட்டும். திறம்பட அச்சேற்றிய பதிப்பகத்தார் ஆகியோருக்கும் நன்றிகள் பல. பூசை ஒழுங்கு, விழா ஒழுங்கு, சிரமதானப் பணி போன்றவற்றை மேற்கொள்கின்ற கழக அங்கத்தவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

நிறைவாக நவராத்திரி விழாக்காலங்களில் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய நல் உள்ளங்களுக்கும் காலத்தினால் அழியாத நன்றிகளைத் தெரிவித்து அமைகின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
இளைஞர்
கழகத்தினர்

இந்து
03.10.2014

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும்

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உள மகிழ்ந்தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே – பல
கலைமலி கழகமும் இதுவே – தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவனதருள் கொடு நன்றே

ஆங்கில அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!

வாழ்க! வாழ்க! வாழ்க!
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

கங்கை பிறிண்டேர்ஸ், யாழ். 0776184567